முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1667

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**22.04.2024,** திங்கட்கிழமை

1. அறம் வேலிகொண்ட அண்ணலே
   ஆறுமுகன் என் அவதார ஞான வள்ளலே
   வரம் பெற்று என் சக்தியாகவே
   வையகத்தை வழி நடத்தும் மாதவசியே
2. தவசியே ஆறுமுக அரங்கனே
   தானுனக்கு சுப்ரமணியர் யானும்
   அவனியில் ஞான அறிவுரை ஆசி
   (குரோதி வருடம் சித்திரை மாதம் 09 ம் நாள், 22.04.2024, திங்கட்கிழமை)
   அரங்கன் உன் சக்திபலம் கூட உரைப்பேன்
3. உரைக்கவே அரங்கனுக்கு நித்தம்நித்தம்
   உயர் ஞானம் பிரம்ம வேளைதனில்
   பெருமைபட ஆறுமுகன் யான் அருளிவர
   பிசகின்றி அரங்கன் தொண்டர்படைகளுக்கும்
4. படைகளுக்கும் இனிதே பாருலகில்
   பாடிடுவேன் அரங்கன் வழி என் ஆசிபலம்
   வரமாகக் கிட்டி உலகோர் எல்லாம்
   வருங்காலம் அரங்கன் தேடுகின்ற ஞானிகளாக
5. ஆகவே ஆக்கம் கூடி அகிலத்தில்
   அன்னதான சேவையோடு
   வகைபட சன்மார்க்க நெறி முறையை
   வையகமெங்கும் பரப்பி இனிதே
6. இனிதே உலகமாற்றம் புரிவர்
   இனிதே அரங்கன் தொண்டர்படைகளுக்கு
   இந்த வாய்ப்பை கனிவேலவன் யான் சக்தியாக வழங்கி
   கருணைகொண்டு உடனிருந்து வழி நடத்துகின்றேன்

7. ஆகவே உலகோர் அரங்கன் திருவடி பற்றி இனிதே
ஆற்றல்மிக்க ஞான தீட்சைகளெல்லாம் ஏற்று
மாற்றம் கருதி உலகோர் தொடர்ந்து வந்தால் போதும்
மண்ணுலகில் உலகமாற்றமெனும் ஞான யுகமாற்றம் சடுதி காணக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—